Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 5, 2024

வெள்ளிக்கிழமை ஜூலை 05, 2024 | ஒளி: 09 கதிர்: 288 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடம் நடத்த வேண்டும்



2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி சமிந்திர தயான் லெனவ என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மேற்படி மனுவைத் தாக்கல் செய்வதன் மூலம், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 12(1), 82(6), 3, 4, 118 மற்றும் 125 ஆகிய பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 126 இன் படி அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் 3ஆம் பிரிவின் ஊடாகத் திருத்தப்பட்ட பிரிவு 30(2)ஐ வியாக்கியானம் செய்யக்கூடாது என குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் என்பதைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணைக்குழு அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என்பதால் உயர் நீதிமன்றத்தினால் இது குறித்த இறுதித் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையில், 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படுவதைத் தடுப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பு குறித்த மனுவில் கோரியுள்ளது.

தொடர்ச்சி P2

# 3 பொருட்களின் விலைகள் குறைப்பு

மூன்று அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளதாகவும், புதிய விலைகள் வியாழக்கிழமை (4) முதல் அமுலுக்கு வரும் எனவும் சதொச அறிவித்துள்ளது.

இதன்படி, சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் ஒரு கிலோ கிராம் 15 ரூபாவினாலும், சிவப்பு பருப்பு கிலோ கிராம் ஒன்றின் விலை 14 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் விலை 6 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கின் புதிய விலை 215 ரூபாவாகவும், சிவப்பு பருப்பு ஒரு கிலோ கிராமின் புதிய விலை 282 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் புதிய விலை 269 ரூபாவாகும்.



# ஹிருணிகாவின் பிணை கோரிக்கைக்கு ஆட்சேபனை

மூன்று வருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவை பிணையில் விடுவிக்கக் கோரிய மனு தொடர்பில் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யவுள்ளதாக சட்டமா அதிபர், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (07) அறிவித்துள்ளார்.

இந்த பிணை கோரிக்கை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

# காதலனின் வாக்குமூலத்தால் கிணற்றுக்கு பாதுகாப்பு

■ எஸ்.கீதபொன்கலன்

காணாமல்போன யுவதியின் காதலன் என சந்தேகிக்கப்படும் இளைஞன் வழங்கிய வாக்குமூலத்தை அடுத்து, பாலடைந்த கிணற்றுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த கிணற்றை வெள்ளிக்கிழமை(05) தோண்டுவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

திருகோணமலை, சேருவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தங்கநகர் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதியான நடேஸ்குமார் வினோதினி (வயது 25) என்பவர் காணாமல் போயுள்ளதாக, அவரது குடும்பத்தினரால், சேருவில மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



“ஜனாதிபதியும் அடிமைகளும்

# தேர்தலை ஒத்திவைக்க முயற்சி”

ஜனாதிபதியும் அவரது அடிமைகளும் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி செய்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அடிமைகளும், கையாட்களும், சகாக்களும் நாட்டுக்கு எதிர்மறையான செய்திகளை முன்வைத்து ஜனாதிபதி தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்ற கருத்தைக் கடந்த காலங்களில் உருவாக்கி வந்தனர்.

பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல என மக்களை நம்பவைக்கும் வகையில் அரசியல் செயற்திட்டமொன்றை முன்னெடுக்க ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமான குழுக்களும் முயற்சித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் இன்று சட்ட ரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தலைப் பறிக்க மேலும் பல முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசியலமைப்பை மீறும் சதிகளாகும் என்றார்.

தொடர்ச்சி P2



ஸாஹிராவில் 70 மாணவிகளின்


# உ/த பெறுபேறுகள் வெளியாகின

■ எஸ்.கீதபொன்கலன்

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த, திருகோணமலை ஸாஹிரா கல்லூரி மாணவிகள் 70 பேரின், கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் புதன்கிழமை (3) வெளியிடப்பட்டது.

திருகோணமலை ஸாஹிரா கல்லூரியின் 70 இற்கும் மேற்பட்ட மாணவிகளின் உயர்தர பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



# யாழில் குளவி: பெண் மரணம்

யாழ்ப்பாணம் பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளவி கொட்டியதையடுத்து, குறித்த பெண் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதிலும், அங்கு அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

செட்டிக்குறிச்சி பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய குணசேகரம் வரதாசிரோமணி என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் தனது வீட்டிற்கு அருகில் உள்ள காணியில் பனை ஓலைகளை வெட்டிக் கொண்டிருந்த போது குளவி கொட்டியுள்ளது.

# யாழில் இரு சிறுவர் இல்லங்களுக்கு சீல்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் ஆட்கள் தங்குவதற்கு உகந்த இடமல்லாத இடத்தில் சிறுவர் இல்லங்கள் நடத்தி வந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த தை மாதம் 03 மலையக மாணவர்களுடன் ஆரம்பமான ஒரு சிறுவர் இல்லம், கடந்த மே மாதம் மேலும் 03



மலையக மாணவர்கள் இணைக்கப்பட்டு 06 மாணவர்களுடன் ஒரு சிறுவர் இல்லம் நடத்தி செல்லப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ரூ.1,700க்கு இடைகால தடை

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்கும் வகையில் தொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு வியாழக்கிழமை (07) உயர் நீதிமன்றம் இடைகால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

பெருந்தோட்ட நிறுவனங்களினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.





# தந்தை செல்வா கலையரங்கில் ஐயாவுக்கு இறுதி அஞ்சலி

■ நிதர்ஷன் வினோத்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனது பூதவுடலுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் வைத்து பலரும் அஞ்சலி செலுத்தினர்.

விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்ட சம்பந்தனின் பூதவுடல், யாழ்ப்பாணம் மார்டின் வீதியில் உள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு வியாழக்கிழமை (04) காலை 10 மணியளவில் கொண்டுவரப்பட்டது.

அதன்பின்னர், சம்பந்தனின் பூதவுடலுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து தந்தை செல்வா கலையரங்கிற்குப் பூதவுடல் கொண்டு செல்லப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதேவேளை, சம்பந்தனின் இறுதிக்கிரியை திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஒன்றரை மணி நேரத்துக்கு ஒரு கோடி ரூபாய் செலவு

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (02) அவசரக் கூட்டத்தை நடத்துவதற்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விசேட

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## காதலனின் வாக்குமூலத்தால் கிணற்றுக்கு பாதுகாப்பு

இது தொடர்பான விசாரணையை முன்னெடுத்துவரும் மூதூர் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கிளிவெட்டியைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கிளிவெட்டி கிராமத்தின் எல்லைப் புறத்தில் உள்ள பாழடைந்த கிணற்றைத் தோண்டுவதற்கு நீதிமன்ற அனுமதியை பொலிஸார் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், குறித்த கிணற்றடியில் புதன்கிழமை(03) முதல் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இக்கிணறானது மூதூர் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் வெள்ளிக்கிழமை (05) தோண்டப்படவுள்ளதாக மூதூர் பொலிஸார் கூறினர்.

சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி (வயது 25) என்ற குறித்த யுவதியும், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அயல் கிராமமான கிளிவெட்டி கிராமத்தைச் சேர்ந்த உதயகுமார் விஷ்ணுகாந்த் (வயது 25) என்ற இளைஞனும் காதலித்து வந்ததாகவும் தெரிய வருகின்றது.

குறித்த யுவதி, காதலனுடன் மட்டக்களப்புக்குக் கடந்த மே மாதம் சென்று வசித்து வந்ததுள்ளார். மே மாதம் 31ஆம் திகதி மாலை அழுத நிலையில் குரல் பதிவொன்றை குடும்பத்தாருக்கு அனுப்பியுள்ளார்.

அன்றையதினம் இரவு வீடியோ அழைப்பில் குடும்பத்தாருடன் கதைத்துள்ளார். விரைவில் வீட்டுக்கு வருவதாகக் கூறியுள்ளார். அதன் பின்னர் அவருடன் தொடர்பு இல்லாமல் போயுள்ளது என குடும்பத்தினர் கூறினர்.

இந்நிலையில், குறித்த காதலனின் இலக்கத்திற்கு யுவதியின் குடும்பத்தார் பல முறை தொடர்பை ஏற்படுத்த முயற்சித்தனர். எனினும் அவ்விளைஞன் ஜூன் மாதம் 13ஆம் திகதி அழைப்பை எடுத்துத் தான் வேலையில் நிற்பதாகவும், வீட்டுக்குச் சென்று அக்காவுடன் கதைக்கக் கொடுப்பதாகவும், காணாமல் போயுள்ள யுவதியின் தம்பியிடம் கூறியதாகவும் குடும்பத்தவர்கள் கூறினர்.

இதன் பின்னர் எவ்வித தொடர்பும் இல்லாத நிலையில், சேருவில மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களில் தாம் ஜூலை மாதம் 1ஆம் திகதி முறைப்பாடு செய்ததாகவும் யுவதியின் குடும்பத்தார் கூறினர்.

காணாமல் போயுள்ள யுவதி, கொலை செய்து போடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் குறித்த கிணறானது, ஜே.சி.பி இயந்திரத்தின் உதவியுடன் அருகிலிருந்த குப்பைகளைக் கொண்டு மூடப்பட்டுள்ளதாகவும் சந்தேகம் தெரிவித்துள்ள மூதூர் பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

## யாழில் இரு சிறுவர் இல்லங்களுக்கு சீல்

குறித்த சிறுவர் இல்லம் நடத்திச் செல்லப்பட்ட வீடு பாழடைந்த நிலையில் காணப்படுவதுடன், ஜன்னல்களுக்குக் கதவுகள் அற்ற நிலையில், மாணவர்கள் கட்டில் வசதிகள் இன்றி நிலத்திலையே படுத்துத் தூங்கி எழும்பும் நிலை காணப்பட்டுள்ளது.

அத்துடன் மலசலக்கூட வசதிகள் மற்றும் குளியல் என்பவற்றுக்கு மாணவர்கள் , குறித்த வீட்டிலிருந்து சற்று தொலைவில் பிறிதொரு காணிக்கே செல்ல வேண்டிய நிலை காணப்பட்டுள்ளது.

அதேவேளை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகில், யூனியன் கல்லூரிக்குச் சொந்தமான வீடொன்றில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் 12 மலையக மாணவர்களுடன் ஒரு சிறுவர் இல்லம் நடத்திச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ள 12 மலையக மாணவர்களும் யூனியன் கல்லூரி மாணவர் விடுதிக்கு மாணவர்களை விண்ணப்பிக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்பட்டு மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

மாணவர்கள் யூனியன் கல்லூரியின் பொறுப்பில் இல்லாதது தனி நபர்களின் பொறுப்பிலேயே தங்கியுள்ள நிலையில், எவ்வாறு யூனியன் கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்களை இணைக்கும் விண்ணப்பம் நிரப்பப்பட்டு மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பில் தெளிவாக அறிய முடியாத சூழல் காணப்படுகிறது.

அதேவேளை, குறித்த சிறுவர் இல்லம் வடமாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யாது சட்டவிரோதமாக இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரண்டு சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த 16 மாணவர்களும் முன்னர் கற்ற பாடசாலைகளிலிருந்து விடுகை பாத்திரங்கள் பெற்று, முறைப்படி யூனியன் கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்படாமல், தாற்காலிகமாகவே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இந்நிலையில் வடக்கில் பதிவு செய்யாது இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கும் வடமாகாண ஆளுநரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்க வேண்டாம் எனவும், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களைச் சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலஞ்சம் வாங்கிய பொலிஸ் பரிசோதகர்

சட்டத்தை அமுல்படுத்துவதை தவிர்ப்பதற்காக ஒருவரிடமிருந்து 25,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மஹாபாகே பொலிஸ் பரிசோதகரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே, வியாழக்கிழமை (04) உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிறுத்தியபோது, இலஞ்சம் அல்லது-ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு. தெரிவித்த கருத்துகளைப் பரிசீலித்த பின்னரே சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வத்தளை பள்ளியாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடம் நடத்த வேண்டும்

இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்னர் மனுதாரர் தன்னிடமோ அல்லது தனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசிக்கவோ ஆலோசனை பெறவோ இல்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதோடு 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருப்பது சரியானது என்பதே தனது உறுதியான நிலைப்பாடாகும் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

## “தேர்தலை ஒத்திவைக்க முயற்சி”

செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசியலமைப்பு தெளிவாக கூறினாலும், அரசியலமைப்பு ரீதியாக புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் நாட்டு மக்களுக்கு இருக்கும் உரிமையை இல்லாதொழித்து, சீர்குலைக்க சில குழுக்கள் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் அரசாங்கத்தின் சதி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் புதன்கிழமை (03) விசேட அறிக்கையொன்றை விடுக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமையும் மக்களின் வாக்குரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

மாளிகைகளுக்குள் இருந்து கொண்டு மானங்கெட்ட சதிகள் மூலம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பின்னணி தயார்ப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், இந்நாட்டில் ஜனநாயகத்தின் மரணத்தை முன்னெடுக்க வேண்டாம் என பொறுப்புள்ள அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். தேர்தல் உரிமையை உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சுதந்திரமான மற்றும் ஜனநாயக ரீதியாக தேர்தலொன்றை நடத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளையும், ஜனநாயகம் என்ற பெயரில் பயப்படாமலும், அடிமைப்படாமலும் 220 இலட்சம் நாட்டு மக்களுக்காக வேண்டி எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு மற்றும் இது தொடர்பான அனைத்து அதிகாரிகளிடமும் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அரச இல்லங்களில் நடக்கும் சதிகளை முறியடிக்க வேண்டும். இதன் பொருட்டு அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டி, மக்களை முன்னிலைப்படுத்திக் கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பயணத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

## ஒன்றரை மணி நேரத்துக்கு ஒரு கோடி ரூபாய் செலவு

அறிக்கையொன்றை முன்வைப்பதற்காகப் பாராளுமன்றம் கூட்டப்பட்டது.

ஜனாதிபதியின் உரையின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்து வெளியிட்டதை அடுத்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. இந்த அமர்வு ஒன்றரை மணி நேரம் மட்டுமே நடைபெற்றது.

சபை அமர்வு குறுகியதாக இருந்தாலும், பொதுவாக ஒரு பாராளுமன்றக் கூட்டத்தின் ஒரு நாளுக்குச் செலவிடப்படும் தொகையே குறுகிய கூட்டங்களுக்கும் செலவாகும் என்று பாராளுமன்ற பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### தேர்தலை சந்திப்பதற்கு

## “எதிர்க்கட்சிகளுக்கு முதுகெலும்பு இல்லை”

ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது வேறு எந்த தேர்தலையோ ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலைச் சந்திக்க முதுகெலும்பில்லாத எதிர்க்கட்சிகள் தேர்தலை ஒத்திவைப்பது பற்றிப் பேசினாலும் அரசாங்கம் அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் வியாழக்கிழமை (4) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே பாரிஸ் மாநாட்டில் நாட்டின் கடனை மறுசீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் நாடும் மக்களும் எதிர்பார்க்கும் பொருளாதார, அரசியல், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை தற்போதைய ஜனாதிபதியால் மட்டுமே மேற்கொள்ள முடியும். எனவே, அவரை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக நியமிப்பதன் மூலம், அடுத்த ஐந்து வருடங்களுக்குள், உலகின் பலமான பொருளாதாரம் கொண்ட நாடாக இலங்கையை உருவாக்க முடியும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு உங்கள் நாடு எப்படி இருந்தது என்று யோசித்துப் பாருங்கள். எரிபொருள் இல்லை, மருந்து இல்லை, எரிவாயு இல்லை, சிறு குழந்தைக்குப் பால் மா இல்லை, அத்தியாவசிய சேவைகள் நிறுத்தப்பட்டன. கட்டுமான தொழில்கள் அனைத்தும்



சரிவடைந்தன. முழு நாடும் விரக்தியிலிருந்தது. ஜனாதிபதி சிக்கலிலிருந்து நாட்டைப் பொறுப்பேற்கும் போது-ஒரு பக்கம் கடுமையான பொருளாதார நெருக்கடி, மறு பக்கம் பாரிய மக்கள் எதிர்ப்புமாக இருந்தது.

அப்போது மொட்டுக் கட்சியாகிய நாம் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை தெரிவு செய்தோம். ரணில் விக்ரமசிங்கவுடன் எங்களுக்கு நிறைய அரசியல் பாக்கிகள் இருந்தன. ஆனால் நாட்டுக்காக அதனை மறந்துவிட்டோம். இரண்டு வருடங்கள் கழித்து இன்று நாடு எங்கே இருக்கிறது என்று பார்க்கும் போது அன்று நாம் எடுத்த முடிவு 100 சதவீதம் சரியானது என்று மகிழ்ச்சி அடைகிறோம்.

தற்போது ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக ஒரு கதை வெளியாகியுள்ளது. ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கோ அல்லது எமக்கோ விருப்பமோ, தேவையோ இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். அது நிரந்தரமானது. தேர்தலைச் சந்திக்க முதுகெலும்பில்லாத எதிர்க்கட்சிகள் தேர்தலை ஒத்திவைப்பது பற்றிப் பேசுகின்றன என்றார்.

நாட்டுக்கு ஒரு சவால் வந்தபோது, அதனை எதிர்கொள்ளும் பலமான முதுகெலும்பு ஜனாதிபதிக்கு மட்டுமே இருந்தது. ஐ.ம.சக்தியும் திசைகாட்டியும் விசித்திரக் கதைகளைச் சொல்கின்றன. அதற்கு மக்கள் ஏமாற மாட்டார்கள். மக்கள் விடுதலை முன்னணி, திசைகாட்டி என்ற பெயரில் மாறுவேடத்தில் வந்துள்ளது. ஆனால் அவர்களின் இரத்த வரலாற்றை யாராலும் அழிக்க முடியாது. எதிர்க்கட்சித் தலைவரும், அனுரகுமாரவும் மரண வீடுகளில் தனிமையைப் போக்குவதற்குத்தான் பொருத்தமானவர்கள். அதனால் அந்த இருவரையும் அந்த வேலைக்கு வைத்துக் கொள்வோம். நாட்டைக் கட்டியெழுப்பிய ரணிலிடம் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலையை ஒப்படையுங்கள்.

மொட்டுக் கட்சி ஒரு ஜனரஞ்சகக் கட்சி. நாட்டை ஒருங்கிணைத்த ஜனரஞ்சகத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, எமது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைச் சரியான நேரத்தில் நாட்டுக்குத் தெரிவிப்பார். எங்களிடம் ஒரு வெற்றி வேட்பாளர் இருக்கிறார். நாங்கள் வெற்றிப் பக்கம் இருக்கிறோம். அதனால் தான், சந்திகளிலும், வீதியோரங்களிலும் “நான்தான் மொட்டின் வேட்பாளர்” என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதைக் கணக்கெடுக்காதீர்கள்.

வளமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்குப் பொருளாதார வளர்ச்சிக்கு இணையாகப் பல சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். எமது நாட்டு மக்களும் பாரிய அரசியல் சீர்திருத்த நடவடிக்கையை எதிர்பார்க்கின்றனர். தன்னால் தனக்கான காரியங்களைச் செய்ய முடியும் என்பதை நாட்டுக்கு உழைத்து நிரூபித்த ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க மட்டுமே. அதனால்தான் இப்போது ரணில்தான் ஆள் என்று கிராம மக்கள் சொல்கிறார்கள்.

## ஹிருணிகாவின் பிணை கோரிக்கைக்கு ஆட்சேபனை

பிணை கோரிக்கை தொடர்பில் ஆட்சேபனைகளை முன்வைக்கவுள்ளதால் அதனை எழுத்துமூலம் தாக்கல் செய்வதற்கு எதிர்பார்ப்பதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சொலிட்டர் ஜெனரல், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதன்பிரகாரம் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி, பிணை கோரிக்கை மீண்டும் ஜூலை 11ஆம் திகதி பரிசீலிக்கப்படுமென அறிவித்தார்.

## உ/த பெறுபேறுகள் வெளியாகின

இது குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் மாணவிகள் கடந்த மாதம் முறைப்பாடு செய்திருந்தனர். மாணவிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், மாணவிகளின் பிரச்சினைகள் குறித்து பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் மேற்கொண்டு அவர்களுடைய பெறுபேறுகளை வெளியிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

## முற்றுகை போராட்டம் ஒத்திவைப்பு

ரொசேரியன் லெம்பெட்

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் மற்றும் தொண்டி அடுத்த நம்புதாளை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்று எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 25 மீனவர்களை நாட்டுப்படகுகள் உடன் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி திகதியிலிருந்து தொடர் வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் கடந்த 1ஆம் திகதியிலிருந்து தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருவதுடன் பாம்பன் சாலை பாலத்தை முற்றுகையிட்டு வெள்ளிக்கிழமை (05) போராட்டம் நடத்தி பின்னர் பேரணியாகச் சென்று மண்டபம் ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் ரயிலை மறித்து ரயில் மறியல் போராட்டம் நடத்த முடிவு செய்தனர்.

இந்நிலையில் ராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ரயில் மறியல் போராட்டத்தை மீனவர்கள் தற்காலிகமாக ஒத்தி வைத்த நிலையில் பாம்பன் தூய மரியன்னை ஆலயத்தில் பாம்பன் நாட்டுப் படகு மற்றும் தூத்துக்குடி நாட்டுப்படகு மீனவர் சங்கத் தலைவர்கள் மற்றும் மீனவர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

அந்த கூட்டத்தில் மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், மாவட்ட நிர்வாகம் இது தொடர்பாக மாநில அரசுக்குத் தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் விரைவில் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாக ரயில் மறியல் மற்றும் பாம்பன் பாலம் முற்றுகை போராட்டத்தை ஒத்திவைப்பதாக முடிவு செய்தனர்.

மேலும், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி நாளை காலை பாம்பன் பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

அதேபோல், மீனவர்கள் விடுதலையாகும் வரை காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் தொடரும் என பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமரர் சம்பந்தனின் பூதவுடலுக்கு யாழில் அஞ்சலி

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக வியாழக்கிழமை (04) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்-பலாலி விமான நிலையத்திற்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்ட சம்பந்தனின் பூதவுடல், யாழில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் வியாழக்கிழமை (04) காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மறைந்த சம்பந்தனின் பூதவுடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தனின் இறுதிக்கிரியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(07) திருகோணமலையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# சர்வதேச ரீதியில் 3ஆம் இடம்

10ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு ஆசிய யோக போட்டிகள், ஸ்ரீ இராம் திருமண மண்டபத்தில், ஞாயிற்றுக்கிழமை (30) நடத்தப்பட்டன.

சிவ விஷ்ணு யோகா பீடம், ஆசியா யோகா சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட போட்டிகளில், இலங்கை, இந்தியா,பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். வயது அடிப்படையில் குழுவாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் 6 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் இலங்கையைச் சேர்ந்த ஆனந்தராஜா பவிஷ்னா மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டார். முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை இந்தியாவைச் சேர்ந்த சிறுவர்கள் பெற்றுக்கொண்டனர். இதற்கு முன்னர், இவர், சர்வதேச ரீதியிலான போட்டியில் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டார்.

## மாத்தறையில் ஜயகமு ஸ்ரீலங்கா

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நாடளாவிய மக்கள் நடமாடும் சேவையின் மாத்தறை மாவட்ட நிகழ்வு வெள்ளிக்கிழமை (05) மற்றும் சனிக்கிழமை (06) ஹக்மன டெனி அபேவிக்கிரம விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்வில், குறிப்பாக இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தில் அங்கீகரிக்கப்பட்ட 40 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் சேவையை இலவசமாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பஸ்ஸும் லொறியும் மோதிய விபத்தில் 35 பேர் காயம்

சிலாபம் டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸும், சீமெந்து ஏற்றிச் சென்ற லொறியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 35 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



### மன்னார்–மடு திருத்தல இடைத்தங்கல் வீடுகள் நிர்மாணிப்பதற்கு

# இந்திய அரசு நிதி ஒதுக்கீடு

மன்னார்-மடு திருத்தலத்தில் நிர்மாணிக்கப்படும் குறைந்த செலவிலான இடைத்தங்கல் வீட்டுத் திட்டத்துக்கான மேலதிக கொடுப்பனவாக 100 மில்லியன் இலங்கை ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்த நிலையில், அதற்கான அம்சங்களை முறைமைப்படுத்தும் இராஜதந்திர ஆவணங்கள் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் W.S.சத்யானந்தா ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டுப் பரிமாறிக்கொள்ளப்பட்டது.




இத்திட்டத்துக்கான இந்திய அரசின் மொத்த நிதி ஒதுக்கீடானது தற்போது 400 மில்லியன் இலங்கை ரூபாவாகவுள்ளது.

இலங்கையில் பொருளாதார நிலைமைகளால் மேலெழுந்த சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில், அபிவிருத்தி திட்டங்களின் நிர்மாணப் பணிகளுக்கான மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள கணிசமான மாற்றங்களைக் கவனத்தில்கொண்டு அதற்கு ஈடுகொடுக்கும் முகமாகவும் தற்போது நடைமுறையிலுள்ள 9 நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தி திட்டங்களை துரிதமாக நிறைவேற்றுவதனை இலக்காகக் கொண்டும், அவற்றுக்கு மேலதிக நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

மன்னார்-மடு திருத்தலத்தின் குறைந்த செலவிலான இடைத்தங்கல் வீடுகள் நிர்மாண திட்டமும் குறித்த 9 திட்டங்களில் ஒன்றாகும்.

அத்துடன், இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ், 96 இடைத்தங்கல் வீடுகள் மடு திருத்தலத்தில் நிர்மாணிக்கப்படும் நிலையில், அங்கு வருகை தரும் யாத்திரீகர்கள் அவற்றைப் பயன்படுத்தமுடியும். இத்திட்டம் தற்போது நடைமுறையில் இருக்கும் நிலையில், குறித்த இடைத்தங்கல் வீடுகள் நிர்மாணப் பணிகளின் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

# பாராளுமன்றத்தில் கதைத்து தீர்வு

## வேலையில்லா பட்டதாரிகளிடம் சஜித் கூளுரை

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு- வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பாகப் பாராளுமன்றத்தில் கதைத்து அதற்கான தீர்வினை பெற்றுத் தருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச புதன்கிழமை (3) மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளிடம் வாக்குறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பு-காந்தி பூங்காவின் முன்னால் புதன்கிழமை 2ஆவது நாளாக வேலை பெற்றுத் தரக் கோரி வேலையில்லா பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்ட இடத்திற்கு சென்ற எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துள்ளார்.





இதன்போது, வேலையில்லா பட்டதாரிகள் மேல் மாகாணம் மற்றும் யாழ்ப்பாணத்தில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாணத்தில் நியமனங்கள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வியை கற்று பட்டங்களைப் பெற்றபோதும் இதுவரை அரசாங்கம் வேலை வாய்ப்பை வழங்கவில்லை எனவும் இதனால் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் படித்து பட்டம் பெற்ற எங்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கேட்டறிந்த எதிர்க்கட்சி தலைவர், இது தொடர்பாகப் பாராளுமன்றத்தில் கதைப்பதாகவும் முடிந்தளவு தீர்வை பெற்றுதர முயற்சிப்பதாக தெரிவித்ததையடுத்து, ஆர்பாட்காரார்களும் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

## பாதுகாப்புச் சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு அபராதம்

எம்.எஸ்.எம்.ஹனிபா

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார வியாழக்கிழமை (04) தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 100 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 59 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு 02 இலட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தியாவசிய பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் கூடுதலான விலைக்குப் பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களைக் காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

# மாணவர்களுக்கான வினாவிடை தொகுப்பு வழங்கி வைப்பு

‘தாகம் தீர்க்கும் மேகம்’ அமைப்பின் ஊடாக ‘இன்றைய முயற்சி நாளைய எதிர்காலம்’ என்ற தொனிப்பொருளோடு எதிர்கால மாணவர்களின் பெருப்பேறை அதிகரிப்பதற்காக பின் தங்கிய பாடசாலையான ஆதித்யா தமிழ் மகா வித்தியாலயத்தின் கடந்த கால வினாவிடை ஒரு தொகுப்பு வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், பாடசாலை காரிய ஆலயமும் புனரமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினராகத் தாகம் தீர்க்கும் மேகம் அமைப்பின் தலைவர் சுரேஷ்குமார், பொதுச் செயலாளர் செல்வ ரோகிணியும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை ஊடாக இவர்களுக்குக் கௌரவிப்பு விழாவும் நடைபெற்றதுடன், இன்னும் பல பாடசாலைகளை நோக்கி இவர்களுடைய வேலைத் திட்டம் நடைபெற்று வருகின்றது.









# சரும நோய்கள் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்

இயற்கையான அழகை விடவும், ஒருசில மணிநேரத்துக்கு மட்டுமே இருக்கும் செயற்கையான அழகுக்குக் கிடைக்கும் மௌசு அதிகமாகும். எனினும், இயற்கையின் அழகை விஞ்சிவிடவே முடியாது. பெண்களை பொறுத்தவரையில், செயற்கையான அழகில் இருப்பதையே பலரும் விரும்புகின்றனர். ஆகக் குறைந்து மூன்று மாதங்களுக்கு ஒருதடவையேனும் சிகையலங்கார நிலையங்களுக்குச் சென்றுவிடுவர். முகம், உதடு, கை,கால நகங்களை ஒவ்வொருநாளும் அழகுபடுத்திக்கொள்வர்.

அதற்காக வகை,வகையான அழகு சாதனப் பொருட்களைக் கொள்வனவு செய்துகொள்வார்கள், இதில், வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பிரச்சினை இல்லை. தங்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தில் ஒருசிறு தொகையை மீதப்படுத்தி, அவ்வாறான பொருட்களைக் கொள்வனவு செய்துகொள்வார்கள். ஏனைய பெண்கள் பெரும் சிரமப்பட்டே தங்களை அழகுப்படுதிக்கொள்வார்கள்.

குறைந்த சம்பளத்துக்கு வேலைச்செய்யும் பெண்கள், வீட்டுச் சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கும் பெண்களும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பார்கள். அவ்வாறானவர்கள் மிக முக்கியமான வைபவங்களுக்கு மட்டுமே தங்களை அழகுபடுத்திக்கொள்வார்கள் ஏனைய நாட்களில், இயற்கையான அழகுடன் இருந்துவிடுவார்கள்.

இந்நிலையில், சருமத்தை வெண்மையாக்கும் சில அழகு சாதனப் பொருட்களினால் சிறுநீரக நோய் ஏற்படுவதாகத் தோல் நோய் விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். சருமத்தின் நிறத்தை வெண்மையாக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் சில அழகு சாதனப் பொருட்களில் பாதரசம் போன்ற நச்சு உலோகங்கள் அதிகளவில் சேர்க்கப்படுகின்றன.


இவ்வாறான பொருட்களினால் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களை விடச் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாகத் தோல் நோய் விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். ஆகையால், அழகு சாதனப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, மிகக் கவனமாகக் கொள்வனவு செய்யவேண்டும். போலிகள் தொடர்பில் அவதானமாகவே இருக்கவேண்டும்.

அழகு சாதனப் பொருட்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்தியதன் பின்னர் ஏதாவது மாற்றங்கள், ஒவ்வாமை உள்ளிட்ட உபாதைகள் ஏற்படுமாயின் உடனடியாகவே வைத்தியர்களை நாடி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இல்லையேல், பாரிய பாதிப்புகள் ஏற்படும். ஏனெனில், தரம் குறைந்த அழகு சாதனப் பொருட்களை இறக்குமதிச் செய்தனர் என்ற குற்றச்சாட்டுகளுக்கு வர்த்தகர்கள் பலரும் முகங்கொடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தேமல் நோய்க்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை அண்மைய காலங்களில் அதிகரித்துள்ளதாக சரும நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நயனி மதரசிங்க எச்சரித்துள்ளார். ஜூலை 08ஆம் திகதியன்று சர்வதேச சரும ஆரோக்கிய தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்நிலையில், மக்களுக்கு தெளிவூட்டும் வகையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உடலில் அதிகமாக வியர்க்கும் பகுதிகளிலேயே தேமல் நோய்க்காரணியான பூஞ்சை தொற்று பரவுகிறது என்றும் கிருமித் தொற்றுக்குள்ளான பகுதியில் அரிப்பு, தோலில் சிவப்பு நிறத்திலான திட்டுக்களும் உருவாகக்கூடுமென எச்சரித்துள்ளார். ஆகையால், எச்சரிக்கை கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென நாமும் வலியுறுத்துகின்றோம்.






தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 5

# போரின் முடிவை நோக்கிய இரண்டு வினாக்கள் – II

மூன்று தசாப்தங்கள் நீண்ட இலங்கையின் உள்நாட்டுப்போரை ஆய்வுரீதியாக ஆய்வோர் பலருக்கு எழுகின்ற இரண்டு கேள்விகளை மையமாகக் கொண்டு கடந்த வாரக் கட்டுரை அமைந்தது. முதலாவது கேள்வி,விடுதலைப் புலிகள் ஏன் அரசியல் சமரசத்தைப் பல தடவைகள் மறுத்தனர்? இரண்டாவது வினா விடுதலைப் புலிகள் அழிக்கப்படும் அபாய நிலையிலும் ஏன் தமது போர் உத்தியைத் தொடர்ந்தனர்? இந்த இரண்டு கேள்விகளுக்கான விடையை ஆய்ந்த கடந்த வாரக் கட்டுரையின் தொடர்ச்சியாக இக்கட்டுரை அமைகிறது.

2002இல் தொடங்கி நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையானது, இராணுவ அதிகார சமநிலையின் அடிப்படையில் நடத்தப்பட்டது என்பதைப் புலிகள் நம்பினர். எனவே, இராணுவ வலிமை மூலம் பிரிவினை சாத்தியம் என்பது புலிகளின் மூலோபாயத்தின் மையமாக இருக்கலாம். அது உண்மையில் மாயையானதாகவும் அரசியல் நிலைவரங்கள் புரியாத அப்பாவித்தனமாகவும் மாறியது.

2002 முதலான காலப்பகுதியில் பெருமளவிற்கு, விடுதலைப் புலிகளும் அரை-அரசு வலையில் சிக்கினர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் விடுதலைப் புலிகள் உறுதியான இராணுவ பிரசன்னத்தை நிலைநாட்ட முடிந்தது, அது தனது சொந்த வற்புறுத்தல், நிர்வாகம் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டைக் கொண்ட ஒரு பிராந்திய குட்டி அரசாக நிறுவனங்களையும் நடைமுறைகளையும் அமைத்தது. விடுதலைப் புலிகள் தனியான நீதித்துறை, பொலிஸ் படை, உள்ளக வரிவிதிப்புக்கான இயந்திரம் மற்றும் கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான இயந்திரங்களைப் பராமரித்து வந்தனர். இவை அரசு அதிகாரத்தின் பழமையான நிறுவனங்களாக இருந்தன, இது அடிப்படையில் இராணுவத் திறனை மையமாகக் கொண்ட அரசின் சமமான பழமையான கருத்தாக்கத்தால் ஆதரிக்கப்பட்டது. எனினும், விடுதலைப் புலிகளின் தலைவர்கள் ஒருவேளை, அவை அரசமைப்பிற்கான ஆயுதப் போராட்டத்தின் உறுதியான சாதனைகள் என்று நினைத்திருக்கலாம். ஆனால், இந்த 'சாதனைகளின்' பிரச்சினை என்னவென்றால், அவை விடுதலைப் புலிகளை அரசியல் சமரசம் என்ற அதிகாரப்பகிர்வு அல்லது கூட்டாட்சி முறை பற்றிச் சிந்திக்க விடாமல் தடுத்தது.

2002-2004 காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிடிவாதமான நடத்தையின் ஒரு முக்கிய விளைவு சர்வதேச அனுதாபத்தை மொத்தமாக இழந்தமையாகும்.

2003 மார்ச்-ஏப்ரல் மாதங்களில் புலிகள் ஒருதலைப்பட்சமாக சமாதான பேச்சுக்களிலிருந்து விலகிச் செல்லும் வரை மேற்குலக அரசாங்கங்களுக்கிடையில் இருந்த மனோபாவம் விடுதலைப் புலிகளை - 'பயங்கரவாதிகள்' என்ற முத்திரை இருந்தபோதிலும் - ஒரு சட்டபூர்வமான கட்சியாகவும் சமாதான முன்னெடுப்புகளில் பங்காளியாகவும் கருதுவதாகும். இதே அரசாங்கங்கள் புலிகளின் நடத்தையால் அவர்களைப் பயங்கரவாத அமைப்பாகத் தடைசெய்தன. உலக முன்னணிஅரங்காடிகளின் முறையீடுகளுக்கு பலமுறை பதிலளிக்கும் வகையில் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புவதற்குப் புலிகள் பிடிவாதமாக மறுத்ததால், இலங்கையில் சமாதானத்திற்குப் புலிகளே முக்கிய தடையாக இருப்பதாக ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முடிவுக்கு வந்தன. அதற்கான வழியை விடுதலைப் புலிகளே ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

மஹிந்த தலைமையிலான அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது பாரிய இராணுவத் தாக்குதலை ஆரம்பித்தபோது,பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்திற்கான விருப்பத்தை ஆராயுமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு உலகளாவிய செயற்பாட்டாளர்கள் ஆர்வமாக இருக்கவில்லை. அவர்கள் ஒரு குறிப்பிட்ட யதார்த்தத்துடன் இணக்கம் அடைந்ததாகத் தோன்றுகிறது. இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் முக்கிய பங்குவகித்த இணைத்தலைமை நாடுகளைப் பொறுத்தவரைச் சாத்தியமான தீர்வுக்கு விடுதலைப் புலிகளைப் பங்காளி இல்லாமல் செய்வது தவிர்க்கவியலாதது என்று நினைத்தார்கள். அதன்படி, அவர்களை முழுமையாக அகற்றுவதற்கான நடைமுறைத் தேவையை அவர்கள் முன்னிறுத்தினர். அந்த யதார்த்தத்தை உண்மையாக்க ராஜபக்ஷ அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் இருந்தது. இறுதியில் விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியால் சர்வதேச சமூகம் வெளிப்படையாகக் கலக்கமடையவில்லை என்பதில் ஆச்சரியமில்லை.

இனி இரண்டாவது வினாவுக்குத் திரும்புவோம். மேலே முன்வைக்கப்பட்ட இரண்டாவது கேள்வியைப் பொறுத்தமட்டில், விடுதலைப் புலிகள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் மிகமிகத் தொலைவில் இருப்பதை நன்கு அறிந்திருந்தும் அவர்கள் ஏன் போரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதுதான் உண்மையான புதிர். இதே புதிர் இலங்கை அரசாங்கத்திற்கும் பொருந்தும். புலிகளால் விலையுயர்ந்த இராணுவ முட்டுக்கட்டைக்குள் தள்ளப்படும் அபாயத்தை எடுத்துக் கொண்டு, ராஜபக்ஷ ஆட்சி ஏன் போரைத் தேர்ந்தெடுத்தது? இந்த புதிருக்குப் பல விளக்கங்கள் உள்ளன. ஒன்று, இரு தரப்பும் சூழ்நிலைகளின் தர்க்கத்தால் ஒரு புதிய கட்ட போருக்குள் தள்ளப்பட்டது. கடும்போக்கு சிங்கள தேசியவாத கட்சிகள் மற்றும் சித்தாந்த சக்திகளின் கூட்டணியாக இருந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு, புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதற்கான உண்மையான முயற்சியானது தவிர்க்கமுடியாத அரசியல் நிர்ப்பந்தமாக இருந்தது. விடுதலைப் புலிகளுக்கும், யுத்தத்திற்குத் திரும்புவது முற்றிலும் அவசியமானது. குறிப்பாக இடைக்கால பிராந்திய அரசாங்கத்திற்கான அதன் முயற்சி தோல்வியடைந்த பின்னர் அவர்கள் அதையே விரும்பினர். இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் மீதான நிரந்தர அவசரகாலச் சட்டத்தை நிலைநாட்டுவதற்கு விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் தேவைப்பட்டது. அரசியல் ஈடுபாட்டிற்கான இடமும் விருப்பங்களும் கிடைக்காதபோது, ஒவ்வொரு தரப்பும் தங்கள் சொந்த நிபந்தனைகளின்படி மகிழ்ச்சியுடன் போரைத் தொடங்குவதற்கான தர்க்கம் இருந்தது.

இரண்டாவது விளக்கம் இராணுவ நோக்கங்களைப் பற்றியது. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை இலங்கை அரசைப் போரில் ஈடுபடுத்துவதே புலிகளின் நோக்கமாக இருந்தது என்பது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பா.ஜ.கவின் தேர்தல் வெற்றி மற்றும் புதுடில்லியில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைக்கப்படுவதைப் புலிகள் கணக்கிட்டதாகத் தெரிகிறது. அந்தச் சூழ்நிலை, புதுடில்லியில் உள்ள பி.ஜே.பி. அரசாங்கத்தின் அரசியல் ஆதரவுடன், இலங்கை அரசாங்கத்தின் மீது இராணுவ முட்டுக்கட்டையை வலுக்கட்டாயமாகத் திணிக்க அவர்களுக்கு உதவும் என்று புலிகள் நினைத்திருந்தார்கள்.

இச்சூழலின் மூலம் புலிகள் என்ன சாதிக்க விரும்பினர் என்பது தெளிவாக இல்லை. எவ்வாறாயினும், பாரிய அளவிலான போரால் தூண்டப்பட்ட மனிதாபிமான நெருக்கடியின் பின்னணியில், இலங்கையின் மோதலில் இந்தியா மீண்டும் நுழைவதை விடுதலைப் புலிகள் விரும்பியிருக்கலாம் என்பது ஓரளவு தெளிவாகிறது. எனவே, அந்நிய மனிதாபிமானத் தலையீடு என்பது புலிகள் ஒருவேளை, எதிர்பார்த்த ஒரு முக்கிய விளைவு. ஆனால், விடுதலைப் புலிகள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. இந்திய பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வியடைந்தது.

காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் அதன் அதிகாரத்தை உறுதியான நிலையில், மீண்டும் நிறுவியது. புலிகளால் எதிரியின் ஆதரவுடன் ஒரு பாரிய மனிதாபிமான நெருக்கடியை உருவாக்க முடிந்தது. ஆனால், அதைத் தடுப்பதற்கு அல்லது நிர்வகிப்பதற்குக் குறிப்பிடத்தக்கச் சர்வதேச பதில் எதுவும் இருக்கவில்லை. அது சர்வதேசத்தின் கவலைக்குரியதாக இல்லை.

இலங்கையின் மோதல் தொடர்பாக சர்வதேச மற்றும் பிராந்திய சக்திகளின் நடத்தை மற்றும் நிகழ்ச்சி நிரலை விடுதலைப் புலிகள் முற்றிலும் தவறாகப் புரிந்து கொண்டதாகத் தெரிகிறது. எந்தவொரு அரசியல் அல்லது மனிதாபிமானப் பாதிப்புக்களையும் பொருட்படுத்தாமல், ஒருதலைபட்ச இராணுவ வெற்றிக்கான இலங்கை அரசியல் மற்றும் இராணுவத் தலைமையின் விருப்பத்தையும் அர்ப்பணிப்பையும் அது குறைத்து மதிப்பிட்டுள்ளது. இலங்கை அரசின் கணக்கிடப்பட்ட இராணுவ சூதாட்டம், அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகள் மீது வெற்றி பெற்றது.

இது மற்றொரு முக்கியமான புள்ளியை நிரூபித்தது: 9/11க்குப் பிந்தைய உலகில், ஒரு பிராந்திய அல்லது உலகளாவிய பெரிய சக்தியால் ஆதரிக்கப்படும் வரை,அரசுக்கு எதிரான கிளர்ச்சியைத் தக்கவைக்கச் சாதகமான சூழ்நிலைகள் இல்லை.

போருக்குப் பின்னர், விடுதலைப் புலிகள் இலங்கையின் அரசியல் சமன்பாட்டின் ஒரு பகுதியாக இல்லாததால், அரசியல் செயல்பாட்டில் என்ன நடக்கும் என்பது முக்கிய வினாவானது. இலங்கையின் உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் மையத்தில் மூன்று பரந்த பிரச்சினைகள் இருந்தன. அவற்றை ஜனநாயகமயமாக்கல், இராணுவமயமாக்கல் மற்றும் அதிகாரப்பகிர்வு என மூன்றாகக் குறிக்கலாம். பெருமளவிலான உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ் குடிமக்களை மீள் குடியேற்றுவது, அவர்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுப்பது மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பை மீளக் கட்டியெழுப்புதல் ஆகியவை உடனடி முன்னுரிமைகளாகக் குறிக்கப்பட்டன. பரந்த மற்றும் உடனடி பிரச்சினைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை அனைத்தும் உள்நாட்டுப் போரிலிருந்து உள்நாட்டு அமைதிக்கான மாற்றத்தை அமைதியான மற்றும் ஜனநாயக ரீதியில் நிர்வகித்தல் என்ற வடிவில் அரசாங்கத்திற்கு பாரிய சவாலாக அமைந்தன. போரில் வெற்றி பெறுவதும் அமைதியை வெல்வதும் சமமான அதேவேளை, மிகவும் வேறுபட்ட சவால்கள். முதலாவது தானாக இரண்டாம் நிலைக்கு வழிவகுக்காது. போரை வெல்வதானது சமானத்திற்கு வழிசெய்யாது என்பதை இலங்கை அனுபவம் மீண்டுமொருமுறை நிரூபித்தது.



## வாழ்வியல் தரிசனம்

இருண்ட மனதைப் போக்கினால் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புது உலகில்த் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல் வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும்; செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்கு புரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### விபத்துகளைக் கட்டுப்படுத்துங்கள்

முல்லைத்தீவு-திருமுறிகண்டிக்கும் கிளிநொச்சி இரணைமடுவுக்கும் இடையில் அடிக்கடி நிகழ்கின்ற வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்குப் போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என இப்பகுதி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருமுறிகண்டி, இந்துபுரம், பொன்நகர், பாரதிபுரம், கனகாம்பிகைக்குளம் ஆகிய கிராமங்களின் மக்கள் செறிவாக வாழ்கின்ற இப்பகுதியில் ஏ-9 வீதியில் அடிக்கடி நிகழும் விபத்துகளினால் உயிரிழப்புகளும் படுகாயங்களும் தொடர்ந்து ஏற்படுகின்றன.

அத்துடன், கிராமங்களில் இருந்து கனகாம்பிகைக்குளத்திற்கு நீருக்காக வருகின்ற கால்நடைகளை உரிமையாளர்கள் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் குறித்த பகுதியில் கால்நடைகளினாலும் தொடர்ச்சியாக விபத்துகள் ஏற்படுகின்றதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

- நடராசா-கிருஸ்ணகுமார்



# SHMA விருந்தோம்பல் பட்டமளிப்பு வைபவம்

சுவிஸ் அரசாங்கம், அபிவிருத்தி மற்றும் ஒன்றிணைவுக்கான சுவிஸ் முகவர் அமைப்பு (SDC) மற்றும் ஏ.பவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட் (பவர்ஸ்) ஆகியவற்றின் நிதி உதவியினால், முன்னெடுக்கப்படும் நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் நிகழ்ச்சித் திட்டத்தினால் (SSG), இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் காணப்படும் பல்வேறு வாய்ப்புகளை இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அவர்களை தயார்ப்படுத்தும் வகையில் திறன்கள் இடைவெளியை நிவர்த்தி செய்யும் வகையில் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் பிரகாரம் அண்மையில் அதன் இரு பயிலல் நிலையங்களின் அறுபது மாணவர்களுக்கு பட்டமளிப்பு வைபவம் முன்னெடுக்கப்பட்டது. 4 மாத கால வகுப்பறை பயிலல் மற்றும் 5 மாத கால கொடுப்பனவுகளுடனான தொழிற்பயிற்சி போன்றவற்றுடன் ஒன்பது மாத கால பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த இவர்களுக்கு பட்டமளிக்கப்பட்டிருந்தது.

சுவிஸ் தொழிற்பயிற்சி திறன் விருத்தி (VSD) பாடவிதானத்துக்கமைய SSG செயற்திட்டம் அமைந்துள்ளதுடன், விருந்தோம்பல் துறை மற்றும் ஒட்டு மொத்த பொருளாதாரத்துக்கு பெருமளவு பங்களிப்பை வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. திறன்கள் இடைவெளியை நிவர்த்தி செய்வது, தரமான கல்வி நியமங்களை ஸ்தாபிப்பது, பெண்களின் பங்கேற்பை ஊக்குவிப்பது மற்றும் விருந்தோம்பலுக்காக இலங்கையை அதிகளவு நாடும் நாடாக திகழச் செய்வது மட்டுமன்றி, சிறந்த சுற்றுலா மையமாக திகழச் செய்வதை இலக்காக கொண்டு இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

கிரான்ட் கண்டியன் ஹோட்டலில் இந்த சான்றளிப்பு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்காக சுவிட்ஸர்லாந்தின் தூதுவர் சிரி வால்ட் மற்றும் இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் முதல் செயலாளர் (புலம்பெயர்வு) டொரிஸ் மேனர், பவர் பிரதம நிறைவேற்று அதிகாரியும், முகாமைத்துவ பணிப்பாளருமான ரொல்ஃப் பிளாசர், தேசிய இளைஞர் படையணி பணிப்பாளர் பிரிகேடியர் சுஜீவ ரத்நாயக்க ஆகியோருடன் தேசிய இளைஞர் படையணி ஊழிய அங்கத்தவர்கள், பங்காண்மை ஹோட்டல்களின் பொது முகாமையாளர்கள், SHMA ஊழிய அங்கத்தவர்கள் மற்றும் வசதியளிப்போர் என பலரும் கலந்து கொண்டனர்.

நாவுல மற்றும் கண்டி ஆகிய இரு நிலையங்களில் முதலாவதாக SSG நிகழ்ச்சித் திட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, டிசம்பர் மாதத்தில் நுவரெலியாவிலும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மத்திய மாகாணத்தின் மூன்று மாகாணங்களையும் உள்வாங்கி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தில் மொத்தமாக 206 மாணவர்கள் 2023ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்டதுடன், அதில் 152 ஆண் மாணவர்களும், 54 பெண் மாணவிகளும் அடங்கியிருந்தனர். மூன்று நிலையங்களிலும் 26% பெண்கள் உள்ளடக்க வீதத்தை எய்தியிருந்தது. இந்த நிலையங்கள் தேசிய இளைஞர் படையணி வளாகத்தில் அமைந்துள்ளதுடன், SHMAஉடன் தேசிய இளைஞர் படையணி கைகோர்த்து கற்றல் வசதிகளை ஏற்படுத்தியிருந்தது.

SSG நிகழ்ச்சித் திட்டத்துக்கு பவர் நிறுவனத்தின் உரிமையாண்மையில் காணப்படும் கல்விச் சேவைகளை வழங்கும் நிறுவனமான, சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ கல்வியகத்தினால் (SHMA) ஆதரவளிக்கப்பட்டிருந்தது. உயர் தரமான கல்வி வசதிகளை சர்வதேச நியமங்களுக்கமைய பெற்றுக் கொடுப்பதுடன், உயர் தகைமை வாய்ந்த ஹோட்டலியலாளர்களையும் உருவாக்கிய வண்ணமுள்ளது.EHL நிபுணத்துவ டிப்ளோமா கற்கையினூடாக தொழில்சார் கல்விப் பயிற்சியை (VET) வழங்குவதற்கான அனுமதியையும் பெற்றுள்ளது. விருந்தோம்பல் கல்வியில் 1893ஆம் ஆண்டு முதல் முன்னோடியாக அமைந்திருப்பதுடன், 120க்கும் மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த 25,000 க்கும் அதிகமான பழைய மாணவர்களையும் உலகளாவிய ரீதியில் கொண்டுள்ளது.

நாவுல மற்றும் கண்டி நிலையங்களில், 4 மாத கால வகுப்பறை பயிலலைத் தொடர்ந்து, 73 மாணவர்கள் கொடுப்பனவுகளுடனான தொழிற்பயிற்சிகளுக்கான தகைமையைப் பெற்றனர். இதில் தங்குமிடம், உணவுகள் மற்றும் கொடுப்பனவுகள் போன்றன அடங்கியிருந்தன. கண்டி ஹோட்டல் சம்மேளனம் மற்றும் கலாசார முக்கோண ஹோட்டல் சம்மேளனம் ஆகியவற்றில் பதிவு செய்திருந்த 13 ஹோட்டல்களில் இந்த வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 60 பேர் கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்தனர். 82 சதவீத பூர்த்தியை வெளிப்படுத்தியிருந்ததுடன், பெருமைக்குரிய ஹோட்டல்களில் தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக் கொண்டனர்.

தேசிய இளைஞர் படையணிக்கு, விருந்தோம்பல் துறைக்கு மற்றும் ஒட்டு மொத்த பொருளாதாரத்துக்கு பெருமளவு பங்களிப்பு வழங்கக்கூடிய வகையிலான சுவிஸ் தொழில் திறன் விருத்தி (VSD) பாடவிதானத்தை நிறுவி முன்னெடுப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். SHMA இன் பரந்த மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களினால் தேசிய இளைஞர் படையணியின் கற்கைளுக்கு ஆதரவளிக்கப்படுவதுடன், அதனூடாக திறன் படைத்த மற்றும் தொழில்புரியக்கூடிய இளைஞர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுகின்றது. SSG நிகழ்ச்சித் திட்டத்துக்கு தேசிய இளைஞர் படையணி தொடர்ந்தும் ஆதரவளிக்கின்றது.

இந்த ஆண்டு SSG நிகழ்ச்சித் திட்டம், மார்ச் மாதம் வீரவில பயிலல் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் கண்டி, நுவரெலியா மற்றும் நாவுல நிலையங்களில் இரண்டாவது ஆட்சேர்ப்பும் முன்னெடுக்கப்பட்டது. மேலும், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள மற்றும் கம்பஹா மாவட்டத்தின் கட்டுநாயக்க, மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் அம்பாறையிலும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் புதிய நிலையங்களை ஆரம்பிக்க SSG திட்டமிட்டுள்ளது. வருட இறுதியில், மொத்தமாக பத்து நிலையங்களை நிறுவுவதற்கும், அதனூடாக 2025ஆம் ஆண்டின் இறுதியில் 2,240 இளைஞர்களை திறன்படைத்தவர்களாக தயார்ப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

கண்டி நிலையத்தில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. புளத்சிங்கள, கட்டுநாயக்க, ராஜகிரிய, குச்சவெளி, வாழைச்சேவை ஆகிய நிலையங்களில் ஜூலை மாதத்திலும், நாவுல, நுவரெலியா மற்றும் வீரவில நிலையங்களில் ஆகஸ்ட் மாதத்திலும் முன்னெடுக்கப்படும். க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் C சித்தியுடன் பூர்த்தி செய்த, விருந்தோம்பல் துறையில் தொழில் ஆர்வம் கொண்டவர்களுக்கு, இந்த நிலையங்களில் ஏதேனும் ஒன்றில் தம்மை பதிவு செய்து கொண்டு, பயன் பெற முடியும்.

## சர்வதேச தொழிற்துறை எக்ஸ்போ 2024

# கண்காட்சியில் Lumala பங்கேற்பு

இலங்கை சமூகத்தார் மத்தியில் சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துவது மற்றும் செயற்திறனான வாழ்க்கைமுறையை ஊக்குவிக்கும் நோக்குடன் Lumala என அறியப்படும் City Cycle Industries Manufacturing (Pvt.) Ltd., சர்வதேச தொழிற்துறை எக்ஸ்போ 2024 நிகழ்வில் பங்கேற்றிருந்தது. இந்நிகழ்வை தொழிற்துறை அமைச்சு (MOI) மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி சபை (IDB) ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

நாட்டில் முன்னெடுக்கப்படும் அதிகளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த சர்வதேச தொழிற்துறை எக்ஸ்போ 2024 நிகழ்வு, அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பரந்தளவு தொழிற்துறைகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான கண்காட்சியாளர்களை ஒன்றிணைத்திருந்ததுடன், அவர்களின் உற்பத்திகள் மற்றும் புத்தாக்கங்களை வெளிப்படுத்தியிருந்தது. இந்நிகழ்வில் 20க்கும் மேற்பட்ட நாடுகளின் விருந்தினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வில் Lumala பங்கேற்றிருந்ததுடன், சூழலுக்கு நட்பான, செலவுச் சிக்கனமான, ஸ்மார்ட் நடமாடல் தீர்வுகளை அறிமுகம் செய்திருந்தது. அவர்களின் Voltage edition e-bikes இனால் ஒரு தடவை சார்ஜ் செய்து, 100 கிலோமீற்றர்களுக்கு அதிகமான தூரம் பெடல் மிதிப்பு உதவியுடன் பயணம் செய்யக்கூடியதாக இருக்கும். அத்துடன், முழுமையாக சார்ஜ் செய்யப்பட்டு முழு வலுவி இயங்கும் போது, 60 கிலோமீற்றர்களுக்கு அதிகமான தூரம் பயணிக்கக்கூடியதாக இருக்கும்.

அவர்களின் e-bike வண்டியான Eco Hauler ஆனது, இலங்கையில் காணப்படும் அவசர கழிவு முகாமைத்துவ பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. USAID Clean Cities, Blue Ocean (CCBO) நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து, பிளாஸ்ரிக் கழிவை தணிப்பதற்கு பெருமளவு பங்களிப்புகள் வழங்கப்படுகின்றன. அதனூடாக, நகர, ஆற்றோரங்கள் மற்றும் கரையோர பகுதிகளில் காணப்படும் கழிவுகளை வினைத்திறனான வகையில் சேகரிக்கக்கூடியதாக இருக்கும்.

இதுபோன்ற புத்தாக்கம் Lumala ஐப் பொறுத்தமட்டில் புதிய விடயமல்ல. திறமையான R&D நிபுணர்களால் சூழல் நிலைபேறாண்மையை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதுடன், தூய மற்றும் பசுமையான புவிக்கு வழியமைக்கப்படுகின்றது.

ஜுன் 18ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டிருந்த e-சைக்கிள் பவனியில், Lumala தனது மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க சைக்கிள்களை வெளிப்படுத்தியிருந்தது. இலங்கையில் பெருமைக்குரிய வகையில் தயாரிக்கப்பட்ட வாகனங்களை இந்தப் பவனி உள்ளடக்கியிருந்தது. இதனை IDB, MOI, இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் சம்மேளனம் (SLACMA) மற்றும் வாகன பொருத்துனர்கள் சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.


மூன்றாவது முறையாக இந்த பவனி முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இதன் போது 200க்கும் அதிகமான பரந்தளவு வாகனங்கள் காலி முகத்திடல், லோட்டஸ் சுற்றுவட்டம், கோட்டை, டெக்னிகல் சந்தி, பஞ்சிகாவத்தை, மருதானை, பொரளை, பொரளை மயான சந்தி



மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் வரை பயணித்திருந்தன. பவனியின் போது Lumala உடன் புகழ்பெற்ற பாடகரும், பொப் பாடகர்களான பாதியா, சந்துஷின் ஜோடியின் ஒருவரின் சகோதரருமான துஷ்யந்த் வீரமன் சைக்கிளோட்டியாக கலந்து கொண்டார்.

சர்வதேச நிலைபேறாண்மைக்கு ஆதரவளிக்கும் பரந்தளவு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற சூழலுக்கு நட்பான தீர்வுகளை வடிவமைப்பதில் Lumala தன்னை அர்ப்பணித்துள்ளது. ஸ்மார்ட் நடமாடல் தீர்வுகளில் Lumala இன் தலைமைத்துவத்தை இந்த அர்ப்பணிப்பு உறுதியாக நிலைநிறுத்தியுள்ளது.

# இளைய வைரம்



காட்சிக்கு இசையும் மொழியும்
உழைப்புக்கு பணமும் பெற்றாச்சு...

திரையில் வெளியீடு அவனே
ஆயுள் வரை சொந்தக்காரன்...

வெற்றிரசிகனின் தீர்வு
இனி உனக்கென்ன பங்கு...

மொழி தெரியாப் பாடலில்
இசைக்கு பின்னால போகுது காது...

மொழி தெரிந்த பாடலில் மனமும்
சேர்ந்து போகுது வரிக்குப்பின்னால

படைத்தவன் இறந்து விட்டான் பாடியவன்
வாழ வைக்கிறான் தொடர்ந்து மேடையில்

எதுக்கு இத்தனை வீண்வம்பு
மொத்தத்தில் ரசிகன் நான்தானே...



– ஜி.ஜே.பிரகாஷ்–

# மண்ணின் வரங்கள் மரங்கள்..!



காற்றைப் போலே
நீரைப் போலே
கண்ணில் தெரியும்
நிலத்தைப் போலே
ஏற்றநல்லபயனைவழங்கி
எம்மைகாப்பதும் மரங்கள்...

காயைகனியை
இலையைப் பூவை
காயந்தபின்னும
விறகாய் கூட
தன்னைத் தந்து
தியாகம் செய்வதும் மரங்கள்...

மரமாய் செடியாய்
கொடியாய் வேராய்
கிழங்காய் விதையாய்
உண்ணும் நெல்லாய்
எண்ணில் லாததானியவகையாய்
உயிரைக் காப்பதும் மரங்கள்...

வெயிலைத் தடுக்கும்
குடையாய் நிழலாய்
விதவிதமானபறைவைகள் தங்கி
கூடுகள் கட்டிகுடித்தனம் செய்ய
அணிலும் குரங்கும்
தாவிப் பாயந்து
ஆனந்தம் கொள்வதும்
மரங்கள்...

மழையின் கரங்கள் மரங்கள்
மண்ணின் வரங்கள் மரங்கள்...

– ஷெல்லிதாசன்–

# என்னோடு நடனம் புரி...



*Dance me to your beauty*
*with a burning violin*
*Dance me through the panic*
*till I'm gathered safely in*
*Lift me like an olive branch*
*and be my homeward dove*
*Dance me to the end of love.*
*Leonard Cohen.*

என்னோடு நடனம் புரி...

எரியுறும் வயலினொத்த
உன் அழகோடுவந்து
என்னோடுநடனம் புரி...

என்னோடு நடனம் புரி...

எல்லா அபாயங்களுக்கூடும்
பத்திரமாய் நான் கூடடையுமாறு
என்னோடு நீ நடனம் புரி...

தூக்கிக் கொள் எனை,
ஒரு ஒலிவ் கிளைபோல,

மேலும்,

நீ என்னில் நிலைத்துவிடு,
வீடடையும் என் புறாவாய்...


என்னோடு நீ நடனம் புரி
காதலின் இறுதிவரை...



மொழிபெயர்ப்பு: கெக்கிராவ – ஸூலைஹா

வொஷிங்டன்

# தேர்தலில் வெற்றி உறுதி



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலிலிருந்து விலகவில்லை எனவும் வெற்றி பெறுவோம் எனவும் அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சிசார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனும், குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப்பும் களமிறங்கி உள்ளனர். வயது மூப்பு காரணமாக பைடனால், முழுதிறனுடன் பிரசாரம் செய்ய முடியுமா என சந்தேகம் எழுந்தது.

கடந்தவாரம் ஜோ பைடன்- டொனால்ட்டிரம்ப் இடையே நேரடிவிவாதம் நடைபெற்றபோது பைடன் தடுமாறினார். இதனையடுத்து அவருக்கு பதில், வேறொருவரை போட்டியிட வைக்கவேண்டும் என ஜனநாயகக்கட்சி சார்பில் கோரிக்கை எழுந்தது. பைடனுக்கு நெருக்கடியும் கொடுக்கப்பட்டதாக தகவல் வெளியானது.

மீண்டும் ஜனாதிபதியாகும் முயற்சியை கைவிடுமாறு பைடனை வலியுறுத்த 25 எம்.பிக்கள் தயாராக உள்ளதாக தகவல் வெளியானதையடுத்து, போட்டியிலிருந்து விலகுவது குறித்து பைடன்பரிசீலனை செய்துவருவதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது. இருப்பினும் இதனை வெள்ளைமாளிகை மறுத்தது.

இந்நிலையில், பைடன் இது பற்றிக் கூறுகையில், தேர்தலில் இறுதிவரை களத்தில் இருப்பேன். நாங்கள் வெற்றி பெறுவோம். ஜனநாயக கட்சியினர் ஒற்றுமையுடன் பணியாற்றும் போது நாங்கள் எப்போதும் வெற்றிபெறுவோம் என்று கூறினார்.



ஜமைக்கா

'பெரில்' புயலுக்கு

# பலர் பலி

'பெரில்' புயலால் ஜமைக்கா உள்ளிட்ட நாடுகளில் பல உயிர்சேதம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அட்லாண்டிக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக புதிய புயல் சின்னம் உருவானது. இந்த புயலுக்கு 'பெரில்' என பெயரிடப்பட்டது.

புயலின் நகர்வை தென் அமெரிக்கா, கரிபீயன் தீவு நாடுகளைச் சேர்ந்த வானிலை ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். வெனிசுலா நாட்டையொட்டி உருவான இந்தப் புயல் கரீபியன் தீவுகள் வழியாக மெக்சிகோவில் கரையை கடக்கும் என கூறப்பட்டது.

எனவே, வெனிசுலா, கரீபியன் நாடுகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், மீனவர்கள் கடலுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இதனிடையே 'பெரில்' புயல் வெனிசுலா மற்றும் கரீபியன் தீவு நாடுகளில் தாக்கிய நிலையில், புயல் கடந்து செல்லும் இடங்களில் எல்லாம் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

மேலும், வெனிசுலா, ஜமைக்கா, பார்படோஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் சேதத்தை சந்தித்தன. இதனால் அங்கே சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது.

இந்நிலையில், கடற்கரையையொட்டி அமைந்திருந்த நகரங்களில் மரங்கள், மின்கம்பங்கள் உள்ளிட்டவை சாய்ந்தன. மின்சார விநியோகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளில் பாதிப்பு ஏற்பட்டதால் புயல் தாக்குதலுக்கு ஆளான நாடுகளை சேர்ந்த இலட்சக்கணக்கான பொதுமக்கள் பாதிப்படைந்த நிலையில், புயல் பாதிப்புக்கு ஜமைக்காவில் 9 பேர், வெனிசுலாவில் 3 பேர், கிரேனடா தீவில் 3 பேர், செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரேனடைன்ஸ் தீவில் ஒருவர் பலியாகி உள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் நடைபெறுகின்றன.

அதேவேளை, பெரில் புயல் இன்று மெக்சிகோவை ஒட்டி கரையை கடக்கும் என வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



காஞ்சிபுரம்

சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த

# பாதிரியார் கைது

காஞ்சிபுரத்தில் 14 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகப் பாதிரியார் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியொருவர், தாய் இறந்து விட்டநிலையில், அக்கா மற்றும் அப்பாவுடன் அவர் வசித்து வந்தார்.

அங்குள்ள பாடசாலை ஒன்றில் படித்து வந்த சிறுமியின் தந்தை, கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் வேலை செய்து வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு வாரக் காலம் சிறுமி தேவாலயத்தில் தங்கி இருந்ததாகச் கூறப்படுகிறது.

அப்போது அங்குப் பாதிரியாராக இருக்கும் தேவ இரக்கம் என்பவர் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

இதனையடுத்து, சிறுமி, அங்கிருந்து கத்தியபடி வீட்டிற்குச் சென்றாராம்.

இதையறிந்து அப்பகுதி மக்கள் சிலர், இது குறித்து முதலமைச்சரின் தனிப்பிரிவில் புகார் தெரிவித்ததையடுத்து காஞ்சிபுரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்துக்கு மனு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

விசாரணையில் உண்மை தெரியவந்த நிலையில் பாதிரியார் தேவ இரக்கம் மீது போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கு அவரை அனுப்பி வைத்துள்ளனர்.

கேரளா மாநிலம்

15 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போன பெண்

# எலும்புக்கூடாக மீட்பு



மனைவி காணாமல் போனதாக வெளியான சம்பவத்தில் 15 ஆண்டுகளுக்குப் பின்பு கழிவு நீர் தொட்டியிலிருந்து மனைவியின் உடல் எலும்புக் கூடாக கைப்பற்றப்பட்டது.

கேரள மாநிலம்-ஆலப்புழா பகுதியைச் சேர்ந்த அனில் குமார் என்பவர், கலா என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

கடந்த 2009ஆம் ஆண்டு கலா திடீரென காணாமல்போனதாகக் கூறி கணவர் அனில் குமார் மற்றொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். தற்போது அனில் குமார் இஸ்ரேலில் வேலை பார்த்து வருகிறார். கேரளாவில் அவருடைய பழைய வீடு புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

இந் நிலையில், 2009ஆம் ஆண்டு காணாமல் போன கலா உண்மையிலேயே காணாமல் போகவில்லை.

கணவன் அனில் குமாரால் கொலை செய்யப்பட்டு வீட்டின் கழிவு நீர் தொட்டியில் போடப்பட்டுள்ளார் எனப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அனில் குமாரின் வீட்டு கழிவுநீர் தொட்டியை சோதனையிட்டதில் உருக்குலைந்த நிலையில், பெண்ணின் எலும்புக்கூடு கைப்பற்றப்பட்டது. இக் கொலைக்கு உடந்தையாக இருந்ததாக ஐந்து பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் அனில் குமாரை இஸ்ரேலில் இருந்து அழைத்து வர முயற்சிகள் எடுத்து வருவதாக கேரள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




சகலதுறைவீரர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய ஹர்திக் பாண்டியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியாவின் ஹர்திக் பாண்டியா முன்னேறியுள்ளார்.

இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் இங்கிலாந்துக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் 23 ஓட்டங்களைப் பெற்றதோடு தென்னாபிரிக்காவுக்கெதிரான இறுதிப் போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை பாண்டியா அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஹர்திக் பாண்டியா, 1.வனிது ஹஸரங்க, 3.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், 4.சிகண்டர் ராசா, 5.ஷகிப் அல் ஹஸன்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானுக்கெதிரான அரையிறுதிப் போட்டியிலும், இறுதிப் போட்டியிலும் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்காவின் அன்றிச் நொர்கியா, ஒன்பதாமிடத்திலிருந்து ஏழு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை அடைந்துள்ளார்.

இதேவேளை, அரையிறுதிப் போட்டியில் 3 விக்கெட்டுகளையும், இறுதிப் போட்டியில் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றிய இந்தியாவின் அக்ஸர் பட்டேல் எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

தவிர, அரையிறுதிப் போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் குல்தீப் யாதவ், 11ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட், 2.அன்றிச் நொர்கியா, 3.வனிது ஹசரங்க, 4.ரஷீட் கான், 5.ஜொஷ் ஹேசில்வூட், 6.அகீல் ஹொஸைன், 7.அக்ஸர் பட்டேல், 8.அடம் ஸாம்பா, குல்தீப் யாதவ், 10. பஸல்ஹக் பரூக்கி.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ட்ரெவிஸ் ஹெட், 2.சூரியகுமார் யாதவ், 3.பில் ஸோல்ட், 4.பாபர் அஸாம், 5.மொஹமட் றிஸ்வான், 6. ஜொஸ் பட்லர், 7.யஷஸ்வி ஜைஸ்வால், 8.பிரண்டன் கிங், 9.ஜோன்சன் சார்ள்ஸ், 10.ஏய்டன் மார்க்ரம்.

சிம்பாப்வே எதிர் இந்தியா:

# நாளை ஆரம்பிக்கிறது இருபதுக்கு-20 தொடர்



சிம்பாப்வே, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது ஹராரேயில் நாளை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து அணித்தலைவர் றோஹித் ஷர்மா, விராட் கோலி, இரவீந்திர ஜடேஜா ஓய்வு பெற்றுள்ளதுடன், சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத்தை வென்ற குழாமில் ஷிவம் டுபே, சஞ்சு சாம்சன், யஷஸ்வி ஜைஸ்வால் ஆகியோர் முதலிரண்டு போட்டிகளுக்குப் பின்னர் இந்தியக் குழாமில் இணையவுள்ளனர்.

அந்தவகையில் இந்திய அணித்தலைவர் ஷுப்மன் கில், ருத்துராஜ் கைகவாட், சாய் சுதர்ஷன், துருவ் ஜுரேல், ரியான் பராக், அபிஷேக் ஷர்மா, துஷார் தேஷபந்தே, ஹர்ஷித் ரானா ஆகியோருக்கு தொடர்ந்து இந்திய அணியில் இடம்பிடிப்பதற்கு இத்தொடர் சிறந்த வாய்ப்பாகக் காணப்படுகின்றது.

மறுபக்கமாக இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் அடுத்த இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், இந்திய வீரர்களை எதிர்கொள்வது சிம்பாப்வேக்கு சிறந்த அனுபவத்தை வழங்கும்.

எல்.பி.எல்:

# கொழும்பு ஸ்ரைக்கர்ஸை வென்ற கோல் மார்வல்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), புதன்கிழமை (03) நடைபெற்ற கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் உடனான போட்டியில் கோல் மார்வல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கொழும்பு ரைஸ்க்கர்ஸ் கோல் மார்வல்ஸ்: 179/10 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: இசுரு உதான 52 (34), நிரோஷன் டிக்வெல்ல 50 (18), சஹான் ஆராச்சிகே 35 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷடாப் கான் 4/21 [4], பினுர பெர்ணாண்டோ 3/22 [4], டுனித் வெல்லலாகே 0/27 [4])




கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்: 172/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டுனித் வெல்லலாகே 45 (26), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 29 (17), கிளென் பிலிப்ஸ் 26 (18), திஸர பெரேரா 18 (14), முஹமட் வஸீம் 16 (09), சதீர சமரவிக்கிரம 16 (17), சாமிக கருணாரத்ன 12 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: மகேஷ் தீக்ஷன 2/20 [4], சஹான் ஆராச்சிகே 2/21 [3], இசுரு உதான 2/34 [4], மல்ஷா தருபதி 1/25 [3])

போட்டியின் நாயகன்: இசுரு உதான

மற்றைய போட்டியில் தம்புள்ள சிக்ஸர்ஸை ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

இதேவேளை, தம்புள்ளவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கோல் மார்வெல்ஸை ஜஃப்னா கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



# ஒல்மோவைக் கைச்சாத்திட விரும்பும் பார்சிலோனா?

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா (Bundesliga) கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி.லெய்ப்ஸிக்கின் முன்களவீரரான டனி ஒல்மோவைக் கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா விரும்புகின்றது.

இந்நிலையில், 26 வயதான ஒல்மோவைக் கைச்சாத்திட 60 மில்லியன் யூரோக்கள் தேவையென்ற நிலையில் அதை எவ்வாறு செலுத்துவதென்பது தொடர்பாக இணங்க முயல்கிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 05 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.